# මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
# நிதி, திட்டமிடல் அமைச்சு
# MINISTRY OF FINANCE AND PLANNING

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01 Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: 2484500, 2484600, 2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11 - 2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: TT1P/P1M/4/3/9/1
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2012.11.09

வர்த்தக, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 01(3)2010

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,

<u>நிவாரண அடிப்படையிலான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.</u>

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2010.12.10 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க மற்றும் 2012.02.13 ஆந் திகதிய 01/(2)/2010 ஆம் இலக்க வர்த்தக, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் மீது உங்கள் கவனத்தைக் கோருகின்றேன்.

2013 வரவு செலவுத் திட்டப் பிரேரணைகள் மற்றும் அதனோடு தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்களிற்கேற்ப மேற்படி சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

01. **தகைமை**

(எ) அரசியலமைப்பின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவொன்றில் தொடர்ச்சியாக மூன்று வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆணைக்குழுக்களின் தவிசாளர்களும் உறுப்பினர்களும்.

02. **நிபந்தனைகள், நியதிகள் மற்றும் நிவாரணங்கள்**

02.01 **நிபந்தனைகள் மற்றும் நியதிகள்**

(இ) I. இறக்குமதி /கொள்வனவு செய்யப்பட வேண்டிய மோட்டார் வாகனத்தின் சீ.எப்.ஐ. பெறுமதி ஐ.அ. டொலர் 25,000/-ஆக இருக்க வேண்டும். (அதற்குச் சமனான ஏனைய வெளிநாட்டு காசுத் தொகைகளாக யென் 2,100,000/- உம், யூரோ 20,000/- உம், ஐக்கிய இராச்சியம் பவுன் 16,000/- வும், இந்திய ரூபா 1,300,000 வும் இருக்க வேண்டும்). அவ்வாறு இறக்குமதி/ கொள்வனவு செய்யப்பட வேண்டிய மோட்டார் வாகனத்திற்காக உச்ச என்ஜின் கொள்ளளவொன்று தேவையற்றதாயினும் உரிய மோட்டார் வாகனத்திற்காக செலுத்தப்பட வேண்டிய வரி வீதத்தை தீர்மானிக்கும் போது மட்டும் என்ஜின் கொள்ளளவு அடிப்படையாகக் கொள்ளப்படும்.

அதற்கமைய 02.02 கூட்டினுள் காட்டப்பட்டுள்ளவாறு வரி கணிப்பீடு மேற்கொள்ளப்படும். சேர்த்துக்கொள்ளப்பட்ட பெறுமதியின் மீது வரி (VAT) துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி (PAL) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி (NBT) உட்பட அனுமதிப்பத்திரதாரர் மூலம் செலுத்தப்பட வேண்டிய மொத்த வரிக்குப் பொருந்தக் கூடிய வகையில் உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) வரி மற்றும் சுங்க வரி சீராக்கல்கள் இலங்கைச் சுங்கத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும்.

II. இறக்குமதி செய்யப்படும் / கொள்வனவு செய்யப்படும் மோட்டார் வாகனத்தின் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட சீ.எப்.ஐ. பெறுமதி, வரி நிவாரணத்துடன் கூடிய 5,000/- ஐ.அ.டொலர் (யென் 420,000/-, யூரோ 4,000/- மற்றும் ஐக்கிய இராச்சிய பவுன் 3,200/-, இந்திய ரூபாய்கள் 260,000/-) வரை மட்டும் அதிகரித்துச்செல்லக்கூடியதாக உள்ளதோடு, அவ்வாறு அதிகரித்துச் செல்லக்கூடிய தொகைக்கான நிவாரண வரித்தொகைக்குப் புறம்பாக இறக்குமதித் தீர்வையும் செலுத்தப்பட வேண்டும்.

III. மேற்படி (இ) I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அலகிற்குப் புறம்பாக ஏனைய நிதி அலகுகளின் கீழ் மோட்டார் வாகனம் ஒன்று இறக்குமதி செய்யப்படின் அதற்காக 2012.11.09 திகதி நிலவிய நாணயமாற்று விகிதத்தின் மீது ஐ.அ.டொலர் 25,000/ 5,000 இற்குச் சமனான வெளிநாட்டுக் காசுத்தொகை ஏற்புடையதாகக் கொள்ளல் வேண்டும். இந்நிபந்தனைகள் 01/2010 சுற்றறிக்கையின் அடிப்படையில் இதுவரை வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களுக்கும் ஏற்புடையதாகும்.

(உ) "இந்தப் பிரேரணை முறையின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படுகின்ற/கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று மூன்று வருடங்கள் செல்லும் வரை வேறு தரப்பினர்களுக்கு ஒப்படைக்கப்படலாகாது." எனும் பிரிவு அகற்றப்படுவதோடு, அது இந்தப் பிரேரணை முறையின் அடிப்படையில் வழங்கப்பட்ட சகல அனுமதிப்பத்திரம் தொடர்பாகவும் ஏற்புடையதாகும். அதற்கமைய இதன் பிறகு மோட்டார் வாகன ஒப்படைப்பு தொடர்பான எந்தவொரு நிபந்தனையும் இல்லை.

(ஊ) இந்தப் பிரேரணை முறையின் அடிப்படையில் தகைமை பெறாத சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

II. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலப்பகுதிக்குள் ஏதாவதொரு நிவாரண அடிப்படையிலான பிரேரணை முறையொன்றின் (வரி நிவாரணம்) அடிப்படையில் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்து அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்துள்ள உத்தியோகத்தர்கள் (அங்கு 05 வருட காலம் கணிப்பிடப்படுவது, இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றாயின் அதற்குரிய நாணயக் கடிதம் திறந்து வைக்கப்பட்ட தினத்திலிருந்து மற்றும் உள்நாட்டு ரீதியாக கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றாயின் அதன் முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட தினத்திலிருந்தாகும்).

02.02. **வரி நிவாரணங்கள்.**

| வாகன வகை மற்றும் சிலிண்டர் கொள்ளளவு(பெற்றோல் /டீசல்) | சுங்கப்பெறுமதி (CIF அடிப்படையில்) மீது செலுத்தப்பட வேண்டிய வரி வீதம் * |
|---|---|
| 1000CC | 60 |
| 1600 CC | 65 |
| 2000 CC | 70 |
| 2600 CC | 80 |
| 2600 CC விட அதிகம் | 100 |

* 2012.11.09 திகதிக்கு முன்னர் நாணயக் கடிதங்கள் திறந்து வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிற்காக மேற்படி திருத்தப்பட்ட வரி வீதங்கள் ஏற்புடையதாகாது.

ஒப்பம்/ பி.பீ. ஜயசுந்தர
பொதுத் திறைசேரியின் செயலாளர்
மற்றும் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர்.

பிரதிகள்:
1. ஜனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவைச் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களம்
6. ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்